[6th February 1959

Deputy Sevaks

* 65 *Q.*—**Sri K. B. S. MANI** (on behalf of Sri M. C. Muthukumaraswamy) : பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா— தாலூகா வாரியாக போட இருக்கும் டிபுடி சேவக்குகளை (Deputy Sevaks) மேற்பார்வையிட ஜில்லா வாரியாக தனி அதிகாரிகளை நியமிக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

The Hon. Sri P. KAKKAN : The Deputy Sevaks have been and will continue to be under the charge of District Welfare Officers and subject to the supervision and control of Collectors at the district level. The question of appointment of any other officers to supervise the work of Deputy Sevaks does not arise.

Sri M. K. SOMASUNDARAM : இதுவரையில் எந்தக் கலெக்டராவது டெபுடி சேவக்குகள் சரியாக வேலை செய்கிறார்கள் என்று ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்களா அல்லது அவர்கள் சரியாக வேலை செய்வதில்லை என்று புகார் அனுப்பியிருக்கிறார்களா? அவர்களுடைய ரிப்போர்ட்டின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri P. KAKKAN : சமீபத்தில் தாலூகா வாரியாக டெபுடி சேவக்குகளை நியமித்தபோது கலெக்டர்களின் ரிமார்க்கைப் பார்த்தோம் எந்த எந்த டெபுடி சேவக்குகள் நன்றாக வேலை செய்கிறார்கள் என்றும், எந்த எந்த டெபுடி சேவக்குகள் சரிவர வேலை செய்வதில்லை என்றும் பார்த்து நன்றாக வேலை செய்பவர்களையே உத்தியோகத்திற்கு எடுத்துக் கொண்டோம்.

Sri K. B. S. MANI : இந்த ஆண்டில் திறமையுள்ள புதிய டெபுடி சேவக்குகள் நியமிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆனால் அவர்கள் தங்கள் திறமையைக் காண்பிக்க அவர்களிடம் அதிகாரம் இல்லை. ஆகையால் அதிகாரத்தையும் அவர்களுக்குக் கொடுக்க சர்க்கார் முன் வருமா?

The Hon. Sri P. KAKKAN : டெபுடி சேவக்குகளுக்கு ஏற்கனவே என்ன அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தனவோ அதே அதிகாரங்கள்தான் இப்போதும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Sri C. MUTHIAH : அபிவிருத்தி வட்டாரங்களைப் பொறுத்தவரை, ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திற்கும் 13-14 கிராம சேவக்குகள் இருக்கிறார்கள். அபிவிருத்தி வட்டாரங்களுக்கும் இம்மாதிரியான டெபுடி சேவக்குகள் உண்டா? அப்படியானால் அவர்கள் என்னென்ன வேலைகளைத் செய்யவேண்டும் என்று அரசாங்கம் திட்டவட்டமாக நிர்ணயித்திருக்கிறதா?

The Hon. Sri P. KAKKAN : அபிவிருத்தித் திட்டங்களுக்கான உத்தியோகஸ்தர்கள் ஒரு புறமிருக்க, தாலூகாக்களுக்கு டெபுடி சேவக்குகள் உண்டு. இவர்கள் அவர்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு செயலாற்றுகிறார்கள்.

Sri A. GOVINDASAMY : டெபுடி சேவக்குகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை சர்க்கார் ஏன் ஸர்விஸ் கமிஷனுக்கு விடவில்லை?

The Hon. Sri P. KAKKAN : ஹரிஜன சேவையில் அதிகப் பழக்கமும் திறமையும் அனுபவமும் உள்ளவர்களால்தான் இந்தக் காரியங்களை நன்றாகச் செய்ய முடியும். அப்படிப்பட்டவர்களை இந்த உத்தியோகஸ்தர்களாக நியமித்தால்தான் இந்த வேலைகள் நன்றாக நடக்கும். படிப்பு மட்டும் பெற்றவர்கள் இந்த வேலைக்கு வந்தால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது.

6th February 1959]

Sri V. K. KOTHANDARAMAN : டெபுடி சேவக்குகள் என்றால் என்ன அர்த்தம்? "டெபுடி" என்பது ஆங்கில வார்த்தையாகவும், 'சேவக்' என்பது ஹிந்தி வார்த்தையாகவும் இருக்கின்றன. ஆகையால் கனம் மந்திரி இந்தப் பதத்திற்கு அர்த்தம் சொல்வாரா? அத்துடன் இந்தப் பதத்தை தமிழிலும் மொழி பெயர்த்து அந்த வார்த்தையை உபயோகத்திற்குக் கொண்டுவர முடியுமா? (சிரிப்பு.)

(No answer.)

Orphanages

*66 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 3—4—1958 தேதி 536 நெ. கேள்விக்கு மேஜை பேரில் வைக்கப்பட்ட பேபரில் கண்டுள்ளபடி ஜில்லாவாரியாக, ஒவ்வொரு அனாதை விடுதிகளிலும் கிருஸ்துவர்—முஸ்லீம்—ஜாதி ஹிந்துக்கள் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) ஒவ்வொரு அனாதை விடுதிக்கும் ஒரேமாதிரியான கிராண்ட் இல்லாமல், தாரதம்மியப்படுத்திக் கொடுப்பதற்குக் காரணம் என்ன ?

(இ) அனாதை விடுதிகளை சர்க்காரே எடுத்து நடத்த ஏதேனும் உத்தேசமுண்டா?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The total number of children who are Christians, Muslims, etc., are as follows :—

Christians	9,668
Muslims	478
Caste Hindus	7,407
Scheduled Castes	3,185
Scheduled Tribes	3

(*b*) The Government pay as per capita grant of Rs. 10 per in-mate in respect of orphanages situated in the plains and a per capita grant of Rs. 15 for orphanages situated in the Hill stations. But for this difference, the rates are uniform. No discrimination is made on ground of caste, etc. The grants are assessed only in respect of in-mates eligible for the grant (viz.), those destitutes who are between 5 and 18 and are reading in schools recognized by the Education Department.

(*c*) No, Sir.

Sri V. K. KOTHANDARAMAN : 3—4—1958-ம் தேதி 536-ம் கேள்விக்கு மேஜையில் வைக்கப்பட்ட ஸ்டேட்மெண்டைப் பார்க்கும்போது இந்த கிராண்டுகள் தாரதம்மியமான முறையில்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. இனிமேல் இவ்வாறு தாரதம்மியப்படுத்தாமல் ஒரே விதமாக கிராண்டுகள் கொடுக்கப்படுமா? இத்தகைய அனாதை விடுதிகளை சர்க்காரே எடுத்து நடத்துவதற்கு எவ்வளவு காலம் ஆகும்?

The Hon. Sri C. SUBRAMANIAM : நான் ஏற்கனவே பதிலளித்த பிரகாரம் இந்த கிராண்டுகள் ஒரே விதமாகத்தான் கொடுக்கப்படுகின்றன. சமவெளிகளிலுள்ள விடுதிகளுக்கு 10 ரூபாய் வீதமும், மலைப் பிராந்தியங்களிலுள்ள விடுதிகளுக்கு 15 ரூபாய் வீதமும் இவை கொடுக்கப்படுகின்றன. இதில் தாரதம்மியம் இல்லை. இவைகளை எடுத்து நடத்தும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லை. இதில் "நேஷனலைஸேஷன் பாலிஸியும்" வராது.